## கருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி – நகராட்சி / மாநகராட்சிகளில் பொது சுகாதாரத் துறையில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர்கள், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள், ஏ.என்.எம். ஆகிய பணியாளர்களுக்கு சீருடைப்படி ஆண்டொன்றிற்கு ரூ.500/– வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.25** **நாள்:02.02.2010.**

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 07.03.2008.
2. அரசாணை எண்.350, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21.10.2008.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 50016/2006/எச்3, நாள் 30.11.2009.

---

**ஆணை:–**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 07.03.2008–ல் IPP-Vதிட்டப் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் நகராட்சி மருத்துவப் பணிவிதிகளின்கீழ் கொண்டுவரப்பட்டதாலும், அரசாணை எண்.350, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21.10.2008–ல் சீருடைப்படி உயர்வு மாநகராட்சி / நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் பொருந்தும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், மேலும், இவ்வாறான சீருடைப்படி மாநகராட்சி / நகராட்சி நிதியிலிருந்து வழங்கப்படுவதால் அரசுக்கு செலவினம் ஏதுமில்லை என்றும், எனவே, மாநகராட்சி / நகராட்சிகளில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர், பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், ஏ.என்.எம் ஆகிய பணியாளர்களுக்கு ஆண்டொன்றிற்கு சீருடைப்படியாக ரூ.500/– வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1–ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப்பின், நகராட்சி நிர்வாக இயக்குநரின்

பரிந்துரையினை ஏற்று, நகராட்சி / மாநகராட்சிகளில் பொது சுகாதாரத் துறையில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர்கள், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள், ஏ.என்.எம். ஆகிய பணியாளர்களுக்கு சீருடைப்படி ஆண்டொன்றிற்கு ரூ.500/– வழங்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 035.

நகல்:–
மக்கள் நலம் மற்றும் குடும்பநலத்(என்) துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.